## 3. கவன ஈர்ப்பு.

**(அ) பக்கிங்காம் கால்வாய் குறுக்கே மைலாப்பூரில் முண்டகக்கண்ணி அம்மன் கோவில் தெருவை இணைக்கும் பாலம் கட்டும் பணி.**

திருமதி பா. வளர்மதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''பக்கிங்காம் கால்வாயின் குறுக்கே மைலாப்பூரில் முண்டகக்கண்ணி அம்மன் கோயில் தெருவை இணைக்கும் பாலம் கட்டும் வேலை ஆரம்பித்து ஓராண்டுக்கு மேலாகியும், எந்தவித முன்னேற்றமும் இல்லாததால் போக்குவரத்து தடைபட்டு அங்கு வாழும் மக்களுக்கு ஏற்பட்டுள்ள இடைஞ்சல் குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

### அறிக்கை.

பக்கிங்காம் கால்வாயின் குறுக்கே, மைலாப்பூரில் முண்டகக் கண்ணி அம்மன் கோயில் தெருவை இணைக்கும் பாலம் கட்டுக் வதற்காக ரூ. 35 இலட்சம் செலவில் மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, அதற்கு அரசால் அனுமதியும் பாதி மானியம் மற்றும் பாதி கடன் அடிப்படையில் நிதி உதவியும் 27–12–83 நாளிட்ட அரசு ஆணை நிலை எண். 1951-ல் வழங்கப்பட்டது. பின்னர், ஒப்பந்தங்கள் வரவேற்கப்பட்டு ரூ. 31.31 இலட்சத்திற்கு ஒப்பந்தக் காரர், திரு. வி. இரங்கநாதன் அவர்களுக்கு வேலை அளிக்கப் பட்டது. 17–10–84-ல் இப்பணி துவங்கப் பெற்று, பாதசாரி மற்றும் மிதி வண்டி போக்குவரத்திற்காக தற்காலிக மர நடை பாலம் கட்டி முடிக்கப்பட்டது. பின்னர், பழைய பாலம் இடிக் கும் பணி தொடங்கப்பட்டது. பாலத்தின் இரு மருங்கிலும் குடிசைப் பகுதியின் ஆக்கிரமிப்பு இருந்த காரணத்தால், பாலத்தை இடிக்கும் பணி சுமார் மூன்று மாத காலத்திற்கு தடைபட்டது. ஆக்கிரமிப்பாளர்களை அப்புறப்படுத்திய பிறகு, பாலத்தை இடிக்கும் பணி தொடரப்பட்டு துரிதமாக நடைபெற்றது.

சோதனை ஆழ்துளை கான்கிரீட் குழாய் ( Test Pile) தயாரிக்கப்பட்டு பாலப் பகுதியில் இறக்கப்பட்டது. மேற்படி கான்கிரீட் குழாய் பாரம் ஏற்கும் திறன், நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையத்தினரால் சோதிக்கப்பட்ட பின், எஞ்சியுள்ள ஆழ் துளை கான்கிரீட் குழாய் தயாரிக்கும் வேலை மற்றும் அதனை

1986 ஏப்ரல் 28] [திரு. ப. உ. சண்முகம்]

பூமிக்குள் இறக்கும் பணி மேற்கொள்ளப்பட்டது. இதற்கிடையே நவம்பர் 1985-ல் ஏற்பட்ட பெரு வெள்ளத்தின் காரணமாக மேற்படி பணி சுமார் இரண்டு மாத காலத்திற்கு தடைப்பட்டது. மேலே குறிப்பிட்டுள்ள ஆழ்துளை கான்கிரீட் குழாய் தயாரிக்கும் நேரத்தில், மேற்படி பாலத்திற்கு தேவையான 24 கான்கிரீட் உத்திரங்கள் (Prestressed Concrete Beams) அண்ணா சாலையில் உள்ள நெடுஞ்சாலை துறையினரின் வார்ப்புக் கூடத்தில் தயாரிக்கப்பட்டு பாலப் பகுதிக்கு எடுத்துச் செல்லப்பட்டது. ஆழ் துளை கான்கிரீட் குழாய்களை இணைத்து உத்திரங்களும் மற்றும் கான்கிரீட் தளம் போடும் வேலைகளும் துரிதமாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இது முடிவுற்ற பின், பாலத்தின் பிரதான சுவர்களை எழுப்பி அதன்மீது உத்திரங்கள் பொருத்தப்பட்டு மற்றும் இணைப்புச் சாலை வேலைகளும் சேர்ந்து முடிவுற, ஏறக்குறைய இரண்டு மாத காலத்தில் பாலம் முழுமையாக கட்டி முடிக்கப்பட்டு போக்குவரத்துக்கு திறந்து விடப்படும்.

[முற்பகல் 10-30]

திருமதி பா. வளர்மதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையில் 1984—வது ஆண்டு கட்டப்பட்டதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. சமீபத்திலே பெய்த மழையின் காரணமாக நீரின் உள்ளே மரத்தூண்கள் இருக்கின்ற காரணத்தால் பாதிக்கப்பட்டு மரப்பாலம் ஆடுகிற நிலைமையில் இருக்கிறது. பிரதான பாலம் கட்டி முடிக்கப்படும் வரையில் அந்த மரப்பாலத்தைத் தற்காலிக மாகச் சரி செய்வதற்கு அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : பேரவைத் தலைவர் அவர்களே, அந்த மரப்பாலத்தைச் சரி, செய்வதை விட அந்தப் பிரதான சாலை வேலையே இன்னும் இரண்டு மாதத்திற்குள்ளாக முழுமையாகக் கட்டி முடிவடைந்துவிடும் என்றும், போக்குவரத்திற்காக அது திறந்துவிடப்படும் என்றும் அதிகாரிகள் தெரிவித்திருக்கிறார்கள். எனவே மரப்பாலத்தைச் சரி செய்வதைவிட புதிய பாலத்தையே கட்டிவிடுவதுதான் சிறந்தது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

திருமதி பா. வளர்மதி : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்கள் இரண்டு மாதத்திற்குள்ளாகக் கட்டி முடிக்கப்பட்டுவிடும் என்று அதிகாரிகள் தெரிவித்திருப்பதாகச் சொன்னார்கள். நான் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். அங்கே அந்த மரப்பாலத்திற்கு அருகே மிகப் பெரிய மரம் ஒன்று இருக்கிறது. அந்த மரத்திற்கு அருகே மரப்பாலத்தைக் கடக்கிற பாதையில் மின்சார விளக்கு

வசதி இல்லை. அந்த மரம் அங்கே இருப்பதன் காரணத்தால் வயது முதிர்ந்தவர்களும், சைக்கிளிலே செல்பவர்களும் இரவு நேரத்திலே அந்தப் பாதையைக் கடக்கின்றபோது மிகவும் இடைஞ்சலாக இருக்கிறது. விபத்திற்குள்ளாகக்கூடிய சூழ் நிலையும் இருக்கிறது. ஆகவே அவசரமாக அந்த மரத்தை அகற்ற அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : பேரவைத் தலைவர் அவர்களே, அந்த மரத்தை அகற்றுவதை விட அங்கே விளக்கு வசதி அமைத்து வெளிச்சத்தை ஏற்படுத்தினால் போகிறவர் களுக்கும், வருகிறவர்களுக்கும் உதவிகரமாக, நன்மையாக இருக்கும். எனவே, அதற்குண்டான ஏற்பாடு மாநகராட்சி யால் செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(ஆ) குடிசை மாற்று வாரியம் இராயபுரம் தொகுதியில் வீடுகள் கட்டுவது குறித்து.

திரு. ப. பொன்னுரங்கம் : மாண்புமிகு பேரவைத் தலை வர் அவர்களே, ''சென்னை, இராயபுரம் தொகுதி 6-வது வட் டம், காசிபுரம், 'ஏ' பிளாக் பகுதியிலுள்ள நிலச் சொந்தக் காரர்களுக்கு (பட்டா உடையவர்கள்) எந்தவித நிவாரணமும் வழங்காமல் அந்நிலங்களைக் கையகப்படுத்த தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம் நடவடிக்கை எடுத்துள்ளபடியால் அப்பகுதி வாழ் நிலச் சொந்தக்காரர்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள கவலை குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வீட்டுவசதி துறை அமைச்சரின் கவனத் திற்குக் கொண்டு வருகிறேன்.

ாண்புமிகு திரு. என். நல்லுசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, மேற்படி நிலம் கையகப்படுத்தப்படவில்லை.

சென்னை, இராயபுரம் தொகுதி 6-வது வட்டம் காசிபுரம் 'ஏ' பிளாக் என்ற இடத்தில் குடிசைப்பகுதி மாற்று வாரியம் 420 குடியிருப்புகள் கட்ட 1984 ஆம் ஆண்டில் திட்டமிட்டது. இந்த இடத்திற்கு '' பவர் குப்பம்-காசிபுரம் 'ஏ' பிளாக் '' என்று பெயர். இந்த நிலம் அரசாங்கத்திற்கு சொந்தமானது. இதில் 276 குடியிருப்புகள் 1986 ஆம் ஆண்டு மார்ச் முடிய கட்டி முடிக்கப்பட்டன. மீதம் உள்ள 144 குடியிருப்புகள் கட்டு வதற்கு தேவையான நிலத்தில் வசிப்பவர்கள் ஒரு சிலர் தங்க ளுக்கு வட்டாட்சியாளரால் மனை பட்டா வழங்கப்பட்டதாக தெரிவித்து உள்ளார்கள். ஆகையால், இது குறித்து வட்ட ஆட்சியர் அலுவலகத்தில் ஆய்வு செய்யப்படுகிறது. எனவே தற்போது இவர்களுக்கு நிவாரணம் வழங்கும் அவசியம் எழ வில்லை.